**செய்தி வெளியீடு எண்: 412** **நாள் : 16.08.2016**

**செய்தி வெளியீடு**

தமிழ் நாட்டு மக்கள் **"அனைவருக்கும் சுகாதாரம்"** என்ற குறிக்கோளை அடைவதற்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசாணை எம்.எஸ் எண். 169 நாள் 11.07.2011 மூலம் காப்பீட்டு திட்டமான **"முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்"** என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 11.01.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ.4 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. சில சிறப்புமிக்க சிகிச்சைகளுக்கு ரூ. 1.5 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. 23 வகையான பரிசோதனை முறைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சை முறைகள் என 1016 சிகிச்சை முறைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் முடிவடையும் தருவாயில் உள்ளதால் வரும் 25 மற்றும் 26 ஆகஸ்ட் 2016 ஆகிய இரு தினங்களில் மகாபலிபுரம் கான்ஃபுளுயன்ஸ் கூட்ட அரங்கில் சர்வதேச மாநாடு நடைபெறுகிறது. நடைமுறையில் உள்ள காப்பீட்டுத் திட்டத்தை செறிவு செய்து திட்டத்தின் பலன் மற்றும் பயனாளிகள் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் ஆகியவற்றின் மூலம் இத்திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்துவதே இம்மாநாட்டின் குறிக்கோள் ஆகும்.

1. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் மூலம் நலத்திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தி அதன் மூலம் "அனைவருக்கும் சுகாதாரம்" என்ற குறிக்கோளை அடைதல்.

2. பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் நடைமுறையில் உள்ள காப்பீட்டுத் திட்டங்களின் சிறப்பு அம்சங்களை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் புகுத்தி சிறப்பாக நடைமுறைப்படுத்துதல்.

3. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் விளைவுகள் மற்றும் பலன்களையும் கவனிப்பதுடன் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) வழிகாட்டுதலின்படி இத்திட்டத்தினை சீரமைத்தல்.

4. அகில இந்திய மற்றும் சர்வதேச நிபுணர்களின் சீரிய கருத்துகளை கொண்டு எதிர்காலத்திற்கான பாதை அமைத்தல்.

**“அனைவருக்கும் சுகாதாரம்”** மற்றும் தரமான மருத்துவம் என்ற குறிக்கோளின் அடிப்படையிலும், இத்திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்தும் வகையிலும் இம்மாநாட்டின் மூலம் பெறப்படும் கருத்துக்கள் அடுத்து வரும் ஒப்பந்தத்தில் புகுத்தப்படும்.

இம்மாநாட்டில் கருத்தரங்குகள், குழு விவாதங்கள், ஆய்வறிக்கைகள் மற்றும் வெற்றி அனுபவங்களின் தொகுப்பு ஆகியன பரிமாறப்படும். திட்டமிடல் மற்றும் செயல்படுத்தும் நிபுணர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், காப்பீடு செலுத்துபவர்கள், மூன்றாம் தரப்பு காப்பீடு நிர்வாகிகள், இந்திய மற்றும் சர்வதேசத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்தவோர், மத்திய அரசு உயர் அலுவலர்கள், உலக சுகாதார நிறுவனம், யுனிசெப் மற்றும் உலக வங்கி அலுவலர்கள் என 800 பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து பரிமாற்றங்கள் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாடு மூன்று முக்கிய தலைப்புகளின் கீழ் நடைபெறுகிறது. அவையாவன:

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை செம்மைப்படுத்துதல், மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் பொது சுகாதார திட்டத்தினை பலப்படுத்துதல், இரு தினங்களும் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான சிறப்புமிக்க பேச்சாளர்கள் தங்களது கருத்துக்களை முதன்படுத்தி கலந்துரையாடல் நிகழ்த்த உள்ளனர்.

இம்மாநாட்டிற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட “வெப்சைட்” மற்றும் “ஆண்ட்ராய்டு மொபைல் ஆப்” ஆகஸ்ட் 11 ஆம் தேதி அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

Web site : www.bonnesante16.com

Android Mobile App : கீழ்க்கண்டவாறு பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

Google Play store (https://play.google.com/store/apps/details?id=hr.apps. n207109675).

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**